**ஜூலை – 22**

# TNPSC துளிகள்

- மத்திய அமைச்சர் பிரகலாத் ஜோஷி, கர்நாடகாவின் பெங்களூருவில் உள்ள ஐக்கூரில் 'வெள்ளை ராபிட் தொழில்நுட்பம்' அடிப்படையிலான இந்தியத் திட்ட நேர (IST) விநியோக விளக்க வலைப்பின்னலைத் தொடங்கி வைத்தார்.
- 'வெள்ளை ராபிட் தொழில்நுட்பமானது' வங்கி, பங்குச் சந்தைகள், டிஜிட்டல் பரிவர்த்தனைகள், தொலைத்தொடர்பு, பாதுகாப்பு மற்றும் மின் தொகுப்புகள் போன்ற துறைகளுக்கு மிகத் துல்லியமான நேர ஒத்திசைவைச் செயல்படுத்துகிறது.
- கீர் ஸ்டார்மர் பதவி விலகியதைத் தொடர்ந்து, கிரேட்டர் மான்செஸ்டரின் முன்னாள் மேயரான ஆண்டி பர்ன்ஹாம், 2016 ஆம் ஆண்டிற்குப் பிறகு ஐக்கியப் பேரரசின் (UK) ஏழாவது பிரதமராகப் பதவியேற்றார்.
- 2026 ஆம் ஆண்டு ஜூலையில் நடைபெற்ற ஜப்பான் ஓபன் சூப்பர் 750 மகளிர் ஒற்றையர் இறுதிப்போட்டியில், முன்னாள் உலக சாம்பியனான ஜப்பானின் அகானே யமகுச்சியை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்ற முதல் இந்திய பேட்மிண்டன் வீராங்கனை என்ற பெருமையை பி.வி. சிந்து பெற்றார்.
- மத்திய உள்துறை அமைச்சர், கொல்கத்தாவில் உள்ள தேசிய நூலக வளாகத்தில் இந்தியாவின் முதல் ஆழ்ந்த அனுபவத்தை வழங்கும் மொழி அருங்காட்சியகமான "சப்தலோக் (வார்த்தைகளின் அருங்காட்சியகம்)"-ஐ திறந்து வைத்தார்.
- 2030 ஆம் ஆண்டிற்குள் 100 மில்லியன் டன் (MT) நிலக்கரி வாயுவாக்கல் திறனை அடைவதை தேசிய நிலக்கரி வாயுவாக்கல் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது என நிலக்கரி அமைச்சகம் அறிவித்துள்ளது.
  - இத்திட்டம் ஆண்டுக்கு சுமார் 75 மில்லியன் டன் (MTPA) நிலக்கரியைப் பயன்படுத்துவதையும், தகுதியான ஆலை மற்றும் இயந்திரச் செலவில் 20% வரை நிதிச் சலுகைகளை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1924 ஆம் ஆண்டு ஜூலை 20 ஆம் தேதி சர்வதேச சதுரங்க கூட்டமைப்பு (FIDE) நிறுவப் பட்டதை நினைவு கூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 20 ஆம் தேதி சர்வதேச சதுரங்க தினம் அனுசரிக்கப் படுகிறது.
  - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு Celebrate, create and make a difference என்பதாகும்.
- நீல் ஆம்ஸ்ட்ராங் மற்றும் எட்வின் (பஸ்) ஆல்ட்ரின் ஆகியோர் நிலவில் நடந்த முதல் மனிதர்களாக சாதனை படைத்த அப்பல்லோ 11 திட்டத்தின் (1969 ஆம் ஆண்டு ஜூலை 20) 57வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், 2026 ஜூலை 20 அன்று சர்வதேச நிலவு தினம் அனுசரிக்கப்பட்டது.
  - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "One Moon, One Vision, One Future" என்பதாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## ஊட்டி பெயர் மாற்றக் கோரிக்கை

- உதகமண்டலத்தை அதிகாரப்பூர்வமாக 'ஊட்டகமண்ட்' (ஊட்டி) என பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என நீலகிரி மக்கள் தமிழ்நாடு அரசை வலியுறுத்தியுள்ளனர்.
- பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வந்த ஊட்டகமண்ட் (ஊட்டி) என்ற பெயருக்குப் பதிலாக, தற்போதைய அதிகாரப்பூர்வப் பெயரான உதகமண்டலம் 1972 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

- 'ஊட்டகமண்ட்' என்ற பெயர் ஆங்கிலத்திலிருந்து உருவாகவில்லை என்றும், அது பழங்குடியினரான படுகர் மொழியின் "ஹொட்டெகெமண்ட்" (Hottegemund) என்ற பெயரிலிருந்தே உருவானது என்றும் வரலாற்றுப் பதிவுகள் கூறுகின்றன.
- தோடர், படுகர் மற்றும் கோத்தர் சமூகங்கள் உட்பட இப்பகுதியின் பூர்வீகப் பாரம்பரியத்தை அங்கீகரிப்பதே இந்தக் கோரிக்கையின் நோக்கமாகும்.
- ரெவ். ஏ. மெட்ஸ் (1830), சர் பிரடெரிக் பிரைஸ் (1908) மற்றும் படுகர்-ஆங்கில அகராதி (1992) ஆகியவற்றின் வரலாற்றுப் படைப்புகள் இந்தப் பெயரின் தோற்றத்தை படுகர் மொழியிலிருந்தே கண்டறிகின்றன.




## நொய்யல் நதி அகழ்வாராய்ச்சி




- தமிழ்நாடு மாநில தொல்லியல் துறையானது (TNSDA) கோயம்புத்தூர் வெள்ளலூரில் உள்ள நொய்யல் ஆற்றுப்படுகையிலிருந்து சுமார் 1,000க்கும் மேற்பட்ட தொல் பொருட்களைக் கண்டுபிடித்துள்ளது; இது ஒரு பழங்கால குடியேற்றம் இருந்ததற்கான சான்றுகளை வெளிப்படுத்துகிறது.
- இந்த அகழ்வாராய்ச்சித் தளமானது, தமிழ்நாட்டில் உள்ள காவிரி ஆற்றுப் படுகையின் துணை நதி அமைப்பான நொய்யல் ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ளது.
- ரோமானிய செப்பு நாணயங்கள், மண் பாண்டங்கள், ஆபரணங்கள், வீட்டு உபயோகப் பொருட்கள், கல் அமைப்புகள், நீர் வழிப் பாதைகள், நெசவுக் கருவிகள் மற்றும் மணிகள், இரும்பு, எஃகு மற்றும் சங்கு ஆபரணங்கள் செய்ததற்கான சான்றுகள் ஆகியவை இக்கண்டுபிடிப்புகளில் அடங்கும்.

- சில தொல்பொருட்கள் கி.மு. 1 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3 ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தைச் சேர்ந்ததாகவும், சில பொருட்கள் சுமார் 2,100 ஆண்டுகள் பழமையானவை எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.
- மேற்கு மற்றும் கிழக்கு கடற்கரை வர்த்தக வழிகளை இணைக்கும் ஒரு பழங்கால வர்த்தக மையமாக வெள்ளலூர் இருந்ததை இந்த அகழ்வாராய்ச்சி சுட்டிக் காட்டுகிறது.

## கீழடி பாரம்பரியத் தளம் பாதுகாப்பு

- தமிழ்நாடு தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் ராஜ்மோகன், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கீழடி அகழ்வாராய்ச்சி தளம் மற்றும் அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டார், மேலும் அதன் வரலாற்று முக்கியத்துவத்தைப் பாதுகாத்து மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.
- கீழடி என்பது சங்க கால நகர்ப்புறக் குடியேற்றம் மற்றும் தமிழ் நாகரிகத்திற்கான சான்றுகளை வழங்கும் ஒரு முக்கியமான தொல்பொருள் தளமாகும்.
- இத்தளத்தில் பழங்காலத் தொல்பொருட்கள், மண்பாண்டங்கள், கல்வெட்டுகள் மற்றும் முறையான குடியேற்றம் இருந்ததற்கான சான்றுகள் போன்ற கண்டுபிடிப்புகள் தொடர்புடையதாக உள்ளது.
- கி.மு. 3-ம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ்-பிராமி கல்வெட்டுகள் மற்றும் பழங்கால சமணத் துறவியர் படுக்கைகளுக்குப் பெயர் பெற்ற மாங்குளம் குன்றையும் அமைச்சர் பார்வையிட்டார்.
- மாங்குளத்தில் காணப்படும் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனின் கல்வெட்டுகள், சங்க காலத்தில் பாண்டியர் ஆட்சி இருந்ததற்கான சான்றுகளை வழங்குகின்றன.




# தேசியச் செய்திகள்

## CapaCITIES திட்டம்

- 'நகர்ப்புற பருவநிலைப் பின்னடைவை அளவிடுதல்: CapaCITIES மரபு மற்றும் முன்னோக்கிய பாதை' என்ற நிகழ்வு புது தில்லியில் நடைபெற்றது என்பதுடன் இதில் மூன்று CapaCITIES அறிவுசார் தயாரிப்புகள் வெளியிடப்பட்டன.

- ❖ இந்தியாவில் குறைந்த கார்பன் மற்றும் பருவநிலைத் திறன் கொண்ட நகர மேம்பாட்டிற்கான திறன் மேம்பாட்டுத் திட்டம் (CapaCITIES) 2016 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- ❖ பருவநிலைத் திறன் கொண்ட நகர்ப்புற மேம்பாட்டை ஊக்குவிப்பதற்காக, இந்தியா மற்றும் பூட்டானில் உள்ள சுவிட்சர்லாந்து தூதரகத்தால் இத்திட்டத்திற்கு நிதியளிக்கப் பட்டது.
- ❖ நகரங்களில் பருவநிலைத் திட்டமிடலை வலுப்படுத்துவதன் மூலம் இந்தியாவின் 2070 ஆம் ஆண்டிற்கான நிகர பூஜ்ஜிய உமிழ்வு இலக்கை இத்திட்டம் ஆதரிக்கிறது.
- ❖ இது கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, அகமதாபாத், ராஜ்கோட், வதோதரா, உதய்பூர் மற்றும் சிலிகுரி உள்ளிட்ட 8 நகரங்களுக்கு ஆதரவளித்துள்ளது.
- ❖ இது நிகர-பூஜ்ஜிய பருவநிலைத் திறன் நகர செயல் திட்டங்களை (CRCAPs) உருவாக்கியது, நகரங்களில் பருவநிலை செயல் பிரிவுகளை நிறுவியது, 1,000க்கும் மேற்பட்டவர்களுக்குப் பயிற்சியளித்தது, மேலும் பருவநிலைத் திட்டமிடல் கட்டமைப்புகள் மூலம் 35 க்கும் மேற்பட்ட நகரங்களுக்கு ஆதரவளித்தது.
- ❖ மிதக்கும் சூரிய மின் நிலையங்கள், சூரிய ஒளி மின்சாரப் பேருந்து மின்னேற்ற நிலையங்கள், வெள்ள முன்னெச்சரிக்கை அமைப்புகள், ஏரி சீரமைப்பு, பசுமைப் போக்குவரத்து மண்டலங்கள் மற்றும் நகர்ப்புற காடு வளர்ப்புத் திட்டங்கள் போன்ற நகர்ப்புறத் தீர்வுகளை இத்திட்டம் செயல்படுத்தியது.
- ❖ நிலையான நகர்ப்புற மேம்பாட்டை ஆதரிப்பதற்காக வெளியிடப்பட்ட மூன்று அறிவு சார் தயாரிப்புகள்: நிகர-பூஜ்ஜிய பருவநிலைத் திறன் நகரங்களுக்கான வழிமுறை கருவித் தொகுப்பு, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான (ULB) ஆற்றல் மாற்ற வழி காட்டி புத்தகம் மற்றும் குறைந்த கார்பன் நிதி வெள்ளை அறிக்கை ஆகியனவாகும்.




## உச்ச நீதிமன்ற (நீதிபதிகளின் எண்ணிக்கை) திருத்த மசோதா, 2026

- ❖ இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 33-லிருந்து 37 ஆக (இந்தியத் தலைமை நீதிபதி நீங்கலாக) உயர்த்துவதற்கான உச்ச நீதிமன்ற (நீதிபதிகளின் எண்ணிக்கை) திருத்த மசோதா, 2026-க்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்து உள்ளது.
- ❖ நீதித்துறை செயல்திறனை மேம்படுத்தவும், விரைவாக நீதியை வழங்குவதை உறுதி செய்யவும், உச்ச நீதிமன்ற (நீதிபதிகளின் எண்ணிக்கை) சட்டம், 1956-ஐ திருத்துவதன் மூலம் மேலும் நான்கு நீதிபதிகளைச் சேர்க்க இந்த மசோதா முன்மொழிகிறது.
- ❖ இந்திய அரசியலமைப்பின் 124(1) வது சரத்தானது உச்ச நீதிமன்றத்தை நிறுவுவதற்கு

வழி வகை செய்கிறது, மேலும் சட்டமியற்றுதல் மூலம் நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கிறது.

- 1956 ஆம் ஆண்டு சட்டத்தில் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் மூலம் உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் பலம் 2008 ஆம் ஆண்டில் 25-லிருந்து 30 ஆகவும், 2019 ஆம் ஆண்டில் 30-லிருந்து 33 ஆகவும் உயர்த்தப்பட்டது.
- நீதிபதிகளின் சம்பளம், துணைப் பணியாளர்கள் மற்றும் வசதிகளுக்கான கூடுதல் செலவினம் இந்தியாவின் தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படும்.




## இந்திய மின்னணு வர்த்தக சபை




- இந்திய இணையம் மற்றும் அலைபேசி சங்கமானது (IAMAI) பெங்களூருவில் இந்திய மின்னணு வர்த்தக சபையை (ECCI) அறிமுகப்படுத்தியது.
- ECCI என்பது டிஜிட்டல் வர்த்தக சூழலைப் பிரதிநிதித்துவப்படுத்தவும் வலுப்படுத்தவும் அர்ப்பணிக்கப்பட்ட இந்தியாவின் முதல் தேசிய தொழில் சபை ஆகும்.
- இது மின்னணு வர்த்தகத் தளங்கள், தளவாடங்கள் வழங்குநர்கள், கட்டண நிறுவனங்கள் மற்றும் அரசு ஒழுங்குமுறை அமைப்புகளை இணைக்கும் ஓர் ஒருங்கிணைப்பு அமைப்பாகச் செயல்படுகிறது.
- கொள்கை வாதங்கள், எல்லை தாண்டிய மின்னணு வர்த்தகத் தளங்கள், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் (MSME) டிஜிட்டல் தத்தெடுப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான வர்த்தகம் ஆகியவற்றை ஆதரிப்பதை இந்த சபை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்தியாவின் டிஜிட்டல் வர்த்தகத் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து விவாதிக்க ஆண்டுதோறும் நடைபெறும் இந்திய மின்னணு வர்த்தகத் தளங்கள் உச்சி மாநாட்டையும் (IECS) இந்த சபை ஏற்பாடு செய்யும்.

## தேசிய ஊக்கமருந்து தடுப்புச் (திருத்த) சட்டம், 2025

- நாட்டின் ஊக்கமருந்து தடுப்புக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக, தேசிய ஊக்கமருந்து தடுப்புச் சட்டம், 2022 மற்றும் தேசிய ஊக்கமருந்து தடுப்புச் (திருத்த) சட்டம், 2025 ஆகியவை நடைமுறைக்கு வந்ததை இந்திய அரசு அறிவித்துள்ளது.
- ஊக்கமருந்துப் பயன்பாட்டைத் தடுப்பதற்கும், விளையாட்டு வீரர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், விளையாட்டுகளில் நியாயமான போட்டியை உறுதி செய்வதற்கும் இந்தச் சட்டங்கள் ஒரு சட்டப் பூர்வமான கட்டமைப்பை வழங்குகின்றன.
- இந்தியாவின் ஊக்கமருந்து தடுப்பு அமைப்பு, உலக ஊக்கமருந்து தடுப்புக் குறியீடு (WADA) மற்றும் விளையாட்டில் ஊக்கமருந்து பயன்பாட்டிற்கு எதிரான யுனெஸ்கோ சர்வதேச மாநாடு ஆகியவற்றுடன் சீரமைக்கப்பட்டுள்ளது.
- சோதனை, முடிவுகளின் மேலாண்மை, கல்வி, நுண்ணறிவு மற்றும் விசாரணைகள் தொடர்பான நடைமுறைகளை இந்தச் சட்டம் வலுப்படுத்துகிறது.
- 2025 ஆம் ஆண்டு திருத்தச் சட்டம், ஊக்கமருந்து தடுப்பு நிர்வாகத்தில் நிறுவன சுதந்திரம், வெளிப்படைத்தன்மை மற்றும் தகராறு தீர்க்கும் வழிமுறைகளை மேம்படுத்துகிறது.




## முக்கியத் தொழில்களின் புதிய குறியீடு

- தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையின் (DPIIT), பொருளாதார ஆலோசகர் அலுவலகம் (OEA), 2011-12 ஆம் ஆண்டு அடிப்படையிலான தொடரை மாற்றி, 2022-23 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு திருத்தப்பட்ட முக்கிய தொழில்களின் குறியீட்டு (ICI) தொடரை வெளியிட்டது.
- இரும்புத் தாது ஒரு புதிய துறையாகச் சேர்க்கப்பட்டதால், முக்கியத் தொழில்களின் எண்ணிக்கை 8-லிருந்து 9 ஆக உயர்ந்துள்ளது.
- நிலக்கரி, கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு, சுத்திகரிப்புப் பொருட்கள், உரங்கள், எஃகு, சிமெண்ட், மின்சாரம் மற்றும் இரும்புத் தாது ஆகியவை அந்த ஒன்பது முக்கியத் தொழில்களாகும்.

- 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ICI 5% ஆண்டு வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது என்ற நிலையில் இதில் இரும்புத்தாது (43.9%), மின்சாரம் (9.8%) மற்றும் சிமெண்ட் (9.8%) ஆகியவை முக்கிய வளர்ச்சியை எட்டியுள்ளன.
- புதிய தொடரில், இரட்டைக் கணக்கீட்டைத் தவிர்ப்பதற்காக ஒட்டுமொத்த எஃகு உற்பத்தித் தரவு சேர்ப்பு மற்றும் நிலக்கரி இடைநிலைத் தயாரிப்புகள் (Coal Middling) மற்றும் சுத்திகரிக்கப்பட்ட நிலக்கரி (Washed Coal) ஆகியவற்றைத் தவிர்த்தல் உள்ளிட்ட மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## 2026 ஃபிஃபா உலகக் கோப்பை விருதுகள்




- 2026 ஆம் ஆண்டுக்கான சர்வதேச கால்பந்து கூட்டமைப்பின் (FIFA) உலகக் கோப்பையை இறுதிப்போட்டியில் அர்ஜென்டினாவை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி ஸ்பெயின் அணி வென்றது.
- இத்தொடரின் சிறந்த வீரருக்கான தங்கப்பந்து (Golden Ball) விருதை ரோட்ரி (ஸ்பெயின்) வென்றார்.
- இத்தொடரில் அதிக கோல்கள் (10 கோல்கள்) அடித்த வீரருக்கான தங்க காலணி (Golden Boot) விருதை கைலியன் எம்பாப்பே (பிரான்ஸ்) வென்றார்.
- 2026 ஃபிஃபா உலகக் கோப்பைக்குப் பிறகு, ஆடவர் சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு (FIFA) உலகக் கோப்பை வரலாற்றில் அதிக கோல்கள் அடித்த வீரர் என்ற

பெருமையையும் கைலியன் எம்பாப்பே (பிரான்ஸ்) பெற்றார்.

- இத்தொடரின் சிறந்த கோல்கீப்பருக்கான தங்க கையுறை (Golden Glove) விருதை உனாய் சைமன் (ஸ்பெயின்) வென்றார், சிறந்த இளம் வீரர் விருதை பாவ் குபர்சி (ஸ்பெயின்) வென்றார்.
- முன்மாதிரியான விளையாட்டு நடத்தைக்காக ஜப்பான் FIFA Fair Play விருதைப் பெற்றது.

## விளையாட்டுச் செய்திகள்

### ஃபிஃபா உலகக் கோப்பை சாதனை - லியோனல் மெஸ்ஸி

- 2026 ஆம் ஆண்டிற்கான ஃபிஃபா உலகக் கோப்பை இறுதிப் போட்டியின் போது, மூன்று சர்வதேச கால்பந்து கூட்டமைப்பில் (FIFA) உலகக் கோப்பை இறுதிப் போட்டிகளில் தொடக்க வீரராக விளையாடிய முதல் வீரர் என்ற பெருமையை லியோனல் மெஸ்ஸி (அர்ஜென்டினா) பெற்றார்.
- அவர் 2014, 2022 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஃபிஃபா உலகக் கோப்பை இறுதிப் போட்டிகளில் தொடக்க வீரராக விளையாடி, ஆடவர் கால்பந்து வரலாற்றில் ஒரு தனித்துவமான மைல்கல்லை எட்டியுள்ளார்.
- அவர் கஃபுவின் (பிரேசில்) சாதனையை முறியடித்தார்; கஃபு மூன்று உலகக் கோப்பை இறுதிப் போட்டிகளை எட்டியிருந்தாலும், அதில் இரண்டில் மட்டுமே தொடக்க வீரராக விளையாடினார்.
- 39 வயதில், ஃபிஃபா உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் விளையாடிய மிக மூத்த கள ஆட்டக்காரர் என்ற பெருமையையும் மெஸ்ஸி பெற்றார்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★